Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | நியாஸ்அகமத் | Calling: | வியாபாரம் |
| Father's Name: | நசீர்அகமத் | Religion: | முஸ்லிம் |
| Village: | ஆசிரியர் காலனி | Age: | 64 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 23.07.2024

| SIGN : |
|---|

(எதிரிகள் இருவரும் ஆஜர்.)

அ.சா. 1 முதன்மை விசாரணை

கடந்த 08.04.2019 ம் தேதி நான் சென்னைக்கு போய்விட்டு வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டு உள்ளே வந்து கதவுகளும், பீரோவும் உடைக்கப்பட்டு சுமார் 7 முதல் 8 லட்சம் வரையிலான நகைகளும், வாட்ச்,நகைகளான வளையல், மோதிரம், செயின் ஆகியவை காணாமல் போயிருந்தது. இது குறித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. **புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் நகைகள் கிடைத்து விட்டதாக தகவல் அளித்ததின்பேரில் நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள நகைகள், கேமரா மற்றும் வாட்ச்கள் ஆகியவை தான் களவு போயிருந்தது. **அவை முறையே புகைப்படங்கள் ( எண்ணிக்கை 5) அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிடி அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்ததுதான். புகாரானது கணினியில் தட்டச்சு செய்து அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் திருடுபோன நகைகளின் அடையாளங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் திருடுபோனவுடன் புகார் கொடுக்க சென்றபோது நகைகளை கண்டுபிடித்தவுடன் சொல்லி விடுவதாக சொல்லி அனுப்பினார்கள். எனது நகைகளை கண்டுபிடித்தவுடன் எனக்கு தகவல் சொன்னார்கள். நகைகளை கண்டுபிடித்தவுடன் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் திருடுபோன அன்றே நான் போலிசாருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் சொன்னேன், போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். போலிசார் வந்து உடைக்கப்பட்டிருந்த பூட்டுகளை கைப்பற்றி எடுத்து வந்தனர். போலிசார் என்னை மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) நியாஸ்அகமத்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.